# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 12.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 20215/SCIC/2023**

திரு. சி.கி.முருகன் மேல்முறையீட்டாளர்
த/பெ. கிருஷ்ணமூர்த்தி
31-ஏ / 22, காரைக்காட்டு வெள்ளாழத் தெரு
சிதம்பரம் - 608 001.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
1 எண். இணை சார்பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
1 எண். இணை சார்பதிவாளர் அலுவலகம்
சிதம்பரம், கடலூர் மாவட்டம்.

**ஆணை**

இவ்வழக்கின் விசாரணை ஏற்கனவே 28/04/2025 அன்று ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> **4. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.கி. ஆனந்த் பாபு, 1 எண்.இணை சார்பதிவாளர், சிதம்பரம் அவர்கள் ஆஜரானார். ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு அனுப்பிய தகவல் சரியானதல்ல என ஆணையம் முடிவு செய்கிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலர் / 1 எண்.இணை சார்பதிவாளர், சிதம்பரம் அவர்கள் மனுதாரர் கோரியுள்ள, அலுவலகப் பராமரிப்பில் உள்ள தணிக்கை அறிக்கையினைத் தேடிப்பார்த்து, அதன் நகலை இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு மாத காலத்திற்குள் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையின் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலை ஆணையத்தில் 12/06/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

2. மேற்குறிப்பிட்டவாறு, இன்று (12/06/2025) திரு.கி. ஆனந்த் பாபு, 1 எண். இணை சார்பதிவாளர், சிதம்பரம் அவர்கள் ஆஜராகி, ஆணையம் உத்தரவிட்டவாறு, தீவிரமாகத் தேடியும் தணிக்கை அறிக்கையினை கண்டுபிடிக்க இயலவில்லை என்று தெரிவித்ததோடு, அது தொடர்பான பிரமாணப் பத்திரத்தினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

**3. எனவே, பொதுத் தகவல் அலுவலர் / 1 எண்.இணை சார்பதிவாளர், சிதம்பரம் அவர்கள் மேற்சொன்ன அசல் பிரமாணப் பத்திரத்தினை மனுதாரருக்கு உடனடியாக ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைக்குமாறு ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**4. மாவட்டப் பதிவாளர், சிதம்பரம் பதிவு மாவட்டம் அவர்கள் இவ்வாணை கிடைக்கப் பெற்ற இரண்டு மாத காலத்திற்குள் மேற்சொன்ன தணிக்கை அறிக்கை காணாமல் போனது குறித்து விசாரணை நடத்துவதோடு, அவ்வாறு அந்தக் குறிப்பிட்ட தணிக்கை அறிக்கையினை முறையாகப் பராமரிக்காமல், தொலைந்து போவதற்கு காரணமான பொறுப்பாளி யார் என்பதை நிர்ணயம் செய்து அன்னார் மீது உரிய நடவடிக்கை எடுப்பதோடு, அந்த நடவடிக்கை குறித்த அறிக்கையினை 21/08/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவிடுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**
**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 20215/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
சிதம்பரம் பதிவு மாவட்டம்.

2. பொதுத் தகவல் அலுவலர்/
1 எண். இணை சார்பதிவாளர்
1 எண். இணை சார்பதிவாளர் அலுவலகம்
சிதம்பரம், கடலூர் மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு. சி.கி.முருகன்
த/பெ. கிருஷ்ணமூர்த்தி
31-ஏ / 22, காரைக்காட்டு வெள்ளாழத் தெரு
சிதம்பரம் - 608 001.

RG/PC